ஜோலார்பேட்

வைரஸ் பாதிப்புக்கு 3–வது உயிரிழப்பை இந்தியா சந்தித்துள்ளது. மராட்டிய மாநிலம் மும்பையில் உள்ள கஸ்தூர்பா ஆஸ்பத்திரியில் கொரோனா வைரசுக்கு சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒரு ஆண் உயிரிழந்தார்.

இவர் சமீபத்தில் துபாய் உள்பட வளைகுடா நாடுகளுக்கு சென்று விட்டு மும்பை திரும்பி இருந்தார். ஏற்கனவே பல்வேறு உடல்நல கோளாறுகளால் அவதிப்பட்ட அவருக்கு கொரோனா வைரஸ் தாக்கி இருப்பது சமீபத்தில் உறுதி செய்யப்பட்டது.

### 3 ஆக உயர்வு

அவரை காப்பாற்ற டாக்டர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளித்தனர். என்றாலும் இன்று காலை அவர் உயிரிழந்தார். கொரோனா வைரசால் அவர் உயிரி ழந்து இருப்பதாக டாக்டர்கள் இன்று காலை உறுதிப்படுத்தினார்கள்.

இதனால் இந்தியாவில் கொரோனா வைரஸ் பலி 3–ஆக உயர்ந்துள்ளது.

### அவசர ஆலோசனை

மும்பையில் கொரோனா வைரசுக்கு ஒருவர் பலியாகி இருப்பதை மத்திய அரசும் உறுதிப்படுத்தி உள்ளது. இதைத் தொடர்ந்து மத்திய–மாநில அரசு அதிகாரிகள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டனர்.

மராட்டிய மாநிலத்தில் சுகாதார மந்திரி ராஜேஷ் தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அதிக அளவு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் அறிகுறியுடன் வருபவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கான கூடுதல் ஏற்பாடுகள் செய்ய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பகுதிகளில் கொரோனா பற்றி ஆய்வு செய்யவும், விமான நிலையம், ரெயில் நிலையம் ஆகியவற்றின் அருகிலேயே கொரோனா சம்பந்தப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கான மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற முகாம்கள் நகரில் இல்லாமல் மக்கள் அதிகம் நடமாட்டமில்லாத இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

### பாதுகாப்பு அம்சங்கள்

பயணிகளை பரிசோதனை செய்யும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அம்சங்களை வழங்க வேண்டும்.

மக்கள் அதிகம் வந்து செல்லும் காவல் நிலையம், போக்குவரத்து மிகுந்த இடங்களிலும் தற்காப்பு

இவ்வாறு அவர் பேசினார்.

### அமைச்சர் பதில்

இதற்கு பதிலளித்த அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியதாவது:–

அரசு நடவடிக்கைகளை எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் உறுப்பினர்களும் வரவேற்று பேசினார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதை அனைவரும் சேர்ந்து செயல்படுத்த வேண்டும்.

நேற்று, முதல்–அமைச்சர் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை விமானத்தில் வந்த 1 லட்சத்து 80 ஆயிரத்து 62 பேரிடம் சோதனை நடந்துள்ளது. 2,221 பேர் கண்காணிப்பில் உள்ளனர்.

### ஒத்துழைக்க வேண்டும்

ரெயில் மூலம் இங்கு வருவோரையும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் அதிகம் வரும் இடங்கள் அனைத்தும் சுத்தமாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்திற்கும் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

தமிழகத்தில் இதுவரை யாருக்கும் பாதிப்பு இல்லை. இதே நிலை தொடர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.



சைதை பகுதி 169, 171–வது மேற்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர் எம்.வசந்த குமார் தலைமையில் ஜெயலலிதா பிறந்த நாளை யொட்டி நடந்த கிரிக்கெட் போட்டியில் முதல் பரிசு 50ஆயிரம் , இரண்டாம் பரிசு ரூ.30 ஆயிரம் வென்ற அணிகளுக்கு கோப்பையை தென்சென்னை மாவட்ட செயலாளர் விருகை வி என்.ரவி எம்.எல்.ஏ.வழங்கினார். உடன் ஜெ.ஜெயவர்தன், என்.எஸ். மோகன், சோ.கடும்பாடி, சே.பாலசுப்ரமணியம், வி.சுரேஷ், எம். சுகுமார், நா.பாஸ்கர், என்.ஆர்.ஜோசப், வாழைத்தோப்பு பிரபாகரன், எஸ்.செல்வராஜ், வி.எஸ். நாராயணராவ், ஏ.கபீர், ஏ.ஷேக்அப்துல்லா, எல்.கிருபானந்த,ஜோதி, எம்.சி.சசிகுமார், வி. விஜயன்,எஸ்.அன்சாரி மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.


**சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டின் பங்குதாரர்களின் கவனத்திற்கு (கலைப்பில்)**

**(L21012TN2005PLC092783)**

**கோடகநல்லூர் கிராமம், வடுகன்பட்டி அஞ்சல், ஐ.சி. பேட்டை, திருநெல்வேலி - 627 010.**

**(மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு 13.03.2020 அன்று உத்தரவிட்டதன்படி)**

திவால்நிலை மற்றும் நொடித்தல் தொகுப்பு 2016-ன் கீழ் 24.04.2018 தேதியிட்ட மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (என்சிஎல்டி) உத்தரவின்படி சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட் (எஸ்பிஎல்) தற்போது கலைப்பு நடைமுறையின் கீழ் உள்ளது. ஐபிபிஐ (கலைப்பு நடைமுறை) கட்டுப்பாடுகள், 2016-ன் கீழ் கட்டுப்பாடு 31ஏ-ன் கீழ் மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (என்சிஎல்டி) திட்டங்களை பரிசீலித்தல் மற்றும் வாக்களிப்பதற்காக பங்குதாரர்கள் குழுவை (Stakeholders Committee) அமைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும் மாண்புமிகு என்சிஎல்டி உத்தரவிட்ட தேதியில் இருந்து குறிப்பிட்டுள்ள முறையின் அடிப்படையில் 45 நாட்களுக்குள் பங்குதாரர்களின் கூட்டத்தை (Stakeholders Committee Meeting) கூட்ட வேண்டும். இதற்கு இணங்க, சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டின் பங்குதாரர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று தீர்மான நிபுணர்களில் யாரேனும் ஒருவரை அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக தேர்வு செய்து, அவர்களின் தேர்வு விவரத்தை csdhanapal.ibc@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் அவர்களின் பங்கு விவரங்களுடன் 24.03.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவே சமர்ப்பிக்க வேண்டும் என்று நிறுவனத்தின் கலைப்பாளரான திரு. எஸ். தனபால் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறார். அந்த பிரதிநிதியானவர் மேற்சொன்ன கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் சார்பில் வாக்களிப்பார். 13.03.2020 தேதியிட்ட NCLT உத்தரவு ஆணை மற்றும் தீர்மான நிபுணர்களின் விவரங்கள் www.servalakshmi.co.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.
1. திரு. S. திரவியம், 2. திருமதி. R. ரபீனா, 3. திரு. N. அசோகன்.

இது தொடர்பான மேற்கண்ட நடைமுறைகள் குறித்த விளக்கங்களை, csdhanapal.ibc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துபூர்வமாக அனுப்பி அல்லது 9677022712 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்/-
S. தனபால்
சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டின் (கலைப்பில்) கலைப்பாளர்
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00060/2017-18/10112
அறை எண்.103, முதல் மாடி, காவேரி காம்ப்ளக்ஸ், 96/104,நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
(ரூபார்டு & ஐசிஐசிஐ வங்கி அருகில்), நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தேதி : 16.03.2020
இடம் : சென்னை


# மின்சாரம் தாக்கி தொழிலாளி பலி

அண்ணாநகர், மார்ச் 17–

திருமங்கலம், என்.வி.என். நகர் பகுதியில் குடிசைமாற்று வாரிய வீடுகள் கட்டும் பணி நடந்து வருகிறது. இதில் அசாம் மாநிலத்தை சேர்ந்த உமாகாந்த்(38) என்பவர் தங்கி வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் பணி செய்து கொண்டு இருந்தபோது உமாகாந்த் மின்சாரம் தாக்கி பரிதாபமாக இறந்தார்.